செ.வெ.எண் : 151 நாள் : 05.04.2017

பத்திரிக்கைச் செய்தி

உங்களுக்குத் தெரியுமா?

ஸ்மார்ட் கார்டில் ஆதார் எண்ணும், கைப்பேசி எண்ணும் ஏன் அவசியம் என்று?

- குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் குடும்ப அட்டையில் இடம்பெற வேண்டுமெனில் ஆதார் விவரங்கள் அவசியம் தேவை.
- உங்கள் கைப்பேசி எண் பதிவு செய்யப்பட்டிருந்தால் பொருட்களின் இருப்பு, கடை திறப்பு, பொருட்கள் வாங்கும் விவரங்களை கைப்பேசி வாயிலாக வீட்டிலிருந்தவாறே தெரிந்து கொள்ளலாம்.
- நீங்களாகவே குடும்ப உறுப்பினர்கள் பெயர்களை நீக்கவோ, சேர்க்கவோ அல்லது முகவரி மாற்றம் செய்ய ஒவ்வொரு முறையும் வெப்சைட் (www.tnpds.gov.in) அல்லது tnepds என்ற மொபைல் App-ஐ பயன்படுத்தும் போது உங்கள் கைப்பேசிக்கு ஒருமுறை கடவுச் சொல் (One Time Password - OTP) வரும். அதனை வைத்து தான் உங்கள் குடும்ப அட்டை விவரங்களை இயக்க முடியும்.
- மேலும், புதிய ஸ்மார்ட் கார்டு வந்த பிறகு அதனை செயல்பாட்டிற்கு கொண்டுவர OTP எனப்படும் கடவுச் சொல் எண் உங்கள் கைப்பேசிக்கு வரும் அவ்வெண் அளித்தப் பிறகே உங்கள் புதிய ஸ்மார்ட் கார்டு செயல்பாட்டுக்கு வரும்.
- இந்த OTP எனப்படும் ஒருமுறை கடவுச் சொல் 7 நாட்களுக்கு மட்டுமே பயன்பாட்டில் இருக்கும்.
- குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் நீங்கள் நியாய விலைக் கடையை அணுகி உங்கள் புதிய ஸ்மார்ட் கார்டு-ஐ செயல்பாட்டுக்கு கொண்டு வந்து பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.
- எனவே, குடும்ப அட்டைதாரர்களுக்கு அன்பான வேண்டுகோள்
- இதுநாள்வரை கைப்பேசி எண் தங்கள் குடும்ப அட்டையுடன் பதிவு செய்யாதவர்கள் உடனடியாக பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
- ஏற்கனவே கைப்பேசி எண் பதிவு செய்தவர்கள் அவ்வெண் எப்போதும் பயன்பாட்டில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் பயன்பாட்டில் உள்ள கைப்பேசி எண்ணை மாற்றி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
காஞ்சிபுரம்.